# அனைத்துலகச் சைவ மாநாடு - 2017

## “ சைவ சித்தாந்த மேன்மைகளும் இலங்கையரின் பங்களிப்பும் ”

# ஆய்வடங்கல்

**ISC**
**2017**

21, 22,23 - ஏப்ரல் - 2017
இந்துநாகரிகத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

இரண்டாவது அனைத்துலகச் சைவ மாநாடு - 2017
ISSN No : 2478 - 0634

**பதிப்பாசிரியர் குழு**

**பிரதம பதிப்பாசிரியர்**

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்

**பதிப்பாசிரியர்கள்**

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறீமுரளிதரன்
கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவனேசன்
திரு. ச. முகுந்தன்
திரு. ச. பத்மநாபன்
திரு. பொ. சந்திரசேகரம்
திரு. சி. ரமணராஜா
திரு. தி. செல்வமனோகரன்
திரு. க. கந்தவேள்

**பொறுப்புத் துறத்தல்**

இவ்வாய்வடங்கலில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் அனைத்துக் கருத்துக்களுக்கும் குறித்த கட்டுரைகளின் ஆசிரியர்களே முழுப்பொறுப்பாளிகள் ஆவர்.

# சைவசித்தாந்த தர்க்கவியற் செல்நெறியில் சைவப்பிரகாசனம்

தி.செல்வமனோகரன்

**ஆய்வுச்சுருக்கம்**

*சைவசித்தாந்தம் இந்திய மெய்யியற் பரப்பில் தனக்கான தனியிடத்தைக் கொண்ட ஒரு தத்துவம் ஆகும். இலங்கைவாழ் சைவர்கள் பின்பற்றும் பெருந்தத்துவமாக இது திகழ்கிறது. இச்சைவசித்தாந்த செல்நெறியின் இருண்ட காலமாகத் திகழும் காலனித்துவ ஆட்சிக்காலப்பகுதியில் அதனை மீட்டுருவாக்கம் செய்ய எழுந்த அறிஞர்களுள் இலங்கையர்களும் கணிசமானவராவர். அவர்களுள் சிவசங்கர பண்டிதருக்குத் தனியிடம் உண்டு. அவரெழுதிய சைவப்பிரகாசனம் தமிழில் எழுந்த சைவசித்தாந்த தர்க்கவியல் சார்ந்த முதல் உரைநடை நூலாகும். அதனைப் பகுப்பாய்வு, விவரணம் எனும் ஆய்வு முறையியல்களினூடு இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.*

**திறவுச்சொற்கள்** - சங்கரபண்டிதர், சைவப்பிரகாசனம், சைவசித்தாந்தம், பிராமணம், அட்டபதார்த்தங்கள்.

**அறிமுகம்**

உலகின் ஒவ்வொரு இனக்குழுமமும் தனக்கான தனித்த - கொண்டும் கொடுத்தும் தனக்கானது என ஆக்கிக்கொண்ட சமய, தத்துவ, கலை, கலாசார, பண்பாட்டு அம்சங் களையும் பொருளாதாரம், அரசியல் சார் சமூகஅசைவியக்கங்களையும் கொண்ட தாக அமைந்திருக்கின்றது. இந்தவகையில் இந்திய மரபு உலகுக்குக் கொடுத்த மெய்யியல் மரபுகளில் ஒன்றே சைவசித்தாந்தமாகும். வைதிகமரபில் வந்தவைகளாக வேத உபநிடதங்களிலிருந்து சைவசித்தாந்தத்தை அடையாளங் காண சைவசித்தாந்தச் சார்புடைய அறிஞர்கள் முற்படினும் கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் பின்பே சைவ மெய்யியல் மரபு குறிப்பாகத் தமிழ்நாட்டில் ஆதிக்கம் செலுத்த முற்படுகிறது. காரைக்காலம்மையாரின் வழி உருவாகி சம்பந்தர், அப்பர் முன்னெடுத்த பக்தியியக்கத்தின் வழி சைவம் பெருஞ்சமயமாயிற்று. திருமந்திரமே சைவ சித்தாந்தம் எனும் சொல்லைத் தமிழில் முதன்முதல் சொல்லிற்று.

இதற்குச் சமாந்தரமாக வடநாட்டில் சத்தியயோதி சிவாசாரியாரினதும் அவர் வழி வந்தோரினதும் அஷ்டப்பிரகரண நூல்கள் சைவசித்தாந்தம் எனும் சொல்லை சித்தாந்த சைவ எனவுரைத்து, அதன் கருத்தியல்களையும் கோட்பாட்டியல் ரீதியில் முன்வைத்தது. இதற்கு ஏறத்தாழ 300 வருடங்களின் பின்பே தமிழகத்தில் சைவசித்தாந்தம் சாஸ்திர நிலையை அடைந்தது. சோழர்கால நிலமானிய அமைப்பின் மேற்கட்டுமான கருத்து நிலையின் வெளிப்பாடே சைவசித்தாந்தம் எனும் கருத்துப்புலப்பட சில மார்க்ஸிய அறிஞர்கள் ஆய்வுகளை முன் வைத்தனர்.[1] ஆனால் அக்கருத்தியலின் அடிக்கட்டுமானத்தை இல்லாதொழிக்கும் ஆய்வுகள் பிற்காலத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.[2] அத்தோடு சைவசித்தாந்தம் பிராமணர்க்கு எதிரான தத்துவம், சூத்திர/ வேளாள தத்துவம், வர்க்கமுரண் நிலைத் தத்துவம் போன்ற கருத்துக்கள் ஆங்காங்கே முன் வைக்கப்பட்டன. புறச்சந்தானர் சாரியர்களான அருணந்திசிவாசாரியார், உமாபதி சிவாசாரியார்களின் வரலாறுகள்

உதவிவிரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.
chelvamanoharan@gmail.com - 0776577358

இவற்றுக்கெதிராக அமைந்த - கட்டமைக்கப் பட்ட காட்சியுருக்கள் என்பதை அறிஞர் அறிவர்.

ஈழத்துத் தமிழர்களின் வாழ் வியற் புலம் சைவசித்தாந்தத்தோடு பின்னிப்பிணைந்ததாகவே காணப்பட்டு வந்துள்ளது. சைவ சித்தாந்த மரபின் முதல் உரையாசிரியராக, முதல் தர்க்கவியலாளராகக் காணப்படுபவர் திருநெல்வேலி ஞானப் பிரகாசர். சிவஞானசித்தியாருக்கு அவரெழுதியவுரை இதற்குத் தகுந்த சாட்சி யெனலாம். ஈழத்தின் சைவசித்தாந்த வடமொழித் தர்க்க நூல் புலமையாளரும் அவரே. அதற்கு அவரது 'பிரமாண தீபிகா' தக்கசான்றாகிறது. காலனித்துவ ஆட்சியின் முதற் புலம்பெயராளராகவும் அவரை நாம் குறிப்பிடலாம்.

காலனித்துவ ஆட்சியில் ஒடுக்கப் பட்டுத் தம்மடையாளம் இழந்திருந்த ஈழத்துச் சைவச்சமூகம் அந்நியம் தந்த சலுகைகள் சிலவற்றின்வழி தன்னைப்புத்துயிர்ப்புச்செய்து கொள்ள முயற்சித்தது. அவ்வாறு முயற்சித்து அதில் வெற்றி பெற்று எழுந்து சைவத்தையும் தமிழையும் ஈழத்திலும் தமிழகத்திலும் மீட்டுருச் செய்ய முற்பட்டது. அதற்குத் தலைமை தாங்கியவராக நல்லை நகர் ஆறுமுகநாவலர் கூறப்படுகின்றார். முள்ளை முள்ளால் எடுத்தல் எனும் கருத்துருவின் வழி கிறஸ்தவ ஆங்கில ஆட்சியாளர்களின் ஒடுக்கு முறைக்கு எதிராக அவர்களின் வழியில் நின்று, பாடநூல் - வசனநூல் பதிப்பு, துண்டுப் பிரசுரம், கல்வி- கல்லூரி, சமூகப்பணி, பிரசங்கம், கண்டனம், கண்டன கண்டனம் என சைவத்தைச் சமயமாக மீட்டுருச்செய்தார். அவருக்குப் பக்கத்துணையாக நின்றவர்களுள் முக்கியமானவர் நீர்வேலி சிவசங்கர பண்டி தராவார்.

இவர் சுன்னாகத்தில் பிறந்து, நீர்வேலியில் வாழ்ந்து, பாரததேசத்தின் புதுச்சேரியில் மரித்தவர். இவருடைய காலம் கி.பி *1829* - கி.பி *1871*; நாவலருக்குப்பின் பிறந்து முன் இறந்துவிட்டார். நாற்பத்து இரண்டு வருடங்களே வாழ்ந்தவராயினும் சைவப்பிரகாசனம், மிலேச்சமதவிகற்பம், கிறிஸ்துமதகண்டனம், சிவதூஷணகண்டனம், சத்தசங்கிரகம் (சம்ஸ்கிருதம்), தாதுமாலை (சம்ஸ்கிருத தமிழ் அகராதி), சிராத்தவிதி, பாலபாடம் (2ஆவது) எனும் நூல்களை இயற்றியுள்ளார். தவிர, சித்தாந்தசாராவளி லகுடீகை, சிவஞானபோத தமிழுரை, சட்சுலோகி தமிழுரை, அகநிர்ணயத் தமிழுரை எனும் சமஸ்கிருத நூல்களுக்குத் தமிழுரை எழுதியுள்ளார். இவரால் பல பிரதிகள் கொண்டு பரிசோதிக்கப்பட்டவையாகத் தமிழில் அமைந்த மிருகேந்திர விருத்தி, பௌஷ்கர ஞானபாத மூலம், சிவஞான போத விருத்தி, தேவிகாலோத்திர விருத்தி, தருக்கபரிபாஷை என்பன கூறப்படுகின்றன. அதேவேளை திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவரின் நூல்களைப் பரிசோதித்தும் தொகுத்தும் 'ஞானப்பிரகாசீயம்" எனும் தொகுப்பாக வெளியிட எண்ணியிருந்ததாக அறிய முடிகிறது. ஆயினும் அது கைகூட வில்லை என்பர். சமகாலத்தில் ஒத்த கருத்தியலோடு இயங்கிய ஈழத்துப் புலமையாளராக நாவலரும் பண்டிதரும் அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

"நாவலரும் பண்டிதரும் அத்தியந்த நண்பர்கள். நாவலர் மேற்கொண்ட சைவப் பணிகளுக்குப் பண்டிதர் உதவியாயிருந்தனர். பண்டிதரின் அரிய சமஸ்கிருத அறிவு நாவலருக்கு நூல்கள் எழுதுதல் முதலியவற்றில் பரக்க உபயோகமாகமாயிருந்தது. பண்டிதரைச் சைவமதோத்தாரண விஷயத்தில் உழைக்குமாறு நாவலர் ஊக்கப்படுத்தி வந்தார். இருவருடைய குறிக்கோளும் ஒன்றாகவே இருந்தது. நாவலர் தமது பெரிய புராண

வசனத்துக்கு பண்டிதரிடம் சிறப்புப் பாயிரம் பெற்றதிலிருந்து நாவலர் இவர்மாட்டுக்கொண்ட மதிப்பு எத்தகையது என்பது இனிது விளங்கும்." என்பது குமாரசாமிக்குருக்களின் கூற்றாகும்.[3] மேலும் குடும்பப்பற்று அற்றவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரே இவரின் மரணச் செய்திகேட்டுப் பெருத்துயரங் கொண்டார் எனத்தாமறிந்ததாகக்குருக்கள்பதிவு செய்கிறார். இக்கூற்றுக்களுள் சில மிகையாகவும் இருக்கக்கூடும். ஆயினும் நாவலர் பண்டிதர் நட்பு, புலமைத்துவச் செயற்பாடுகள், ஒத்த இலட்சிய ஒருமைப்பாடுகள் என்பன ஏற்றுக்கொள்ளத்தக்கன. நாவலர் இவரிடம் சிறப்புப்பாயிரம் வாங்கியமை இவரின் புலமைத்துவம் பற்றிய நாவலர் கொண்டிருந்த மதிப்பீட்டுக்கு உதாரணமாக விளங்குகின்ற அதேவேளை பண்டிதர் தன் நூல்களில் ஒன்றுக்கேனும் நாவலரிடம் பாயிரமோ முன்னீடோ வாங்காது விட்டது ஏனெனும் வினா மேற்கிளம்பக்கூடும். பண்டிதரின் காலத்தில் அவரது எழுத்துக்கள் நூலுருப்பெறவில்லை என்பது சற்பிரசங்க நூலுக்கு நீர்வேலி வே.காராளபிள்ளை எழுதிய முன்னுரையால் தெரியவருகிறது.

சம்ஸ்கிருத, தமிழ் மொழிப்புலமைத்துவமும்சமய, தருக்க நூலறிவும்நிரம்பப்பெற்றவர் பண்டிதர். நாவலர் சைவசமயவளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் அதற்கியைபான விடயங்களையே மேற்கொள்பவராக இருந்தார். அதேவேளை இலக்கண நூலின் பதிப்புக்கு உதவுபவராக, கருவி நூலாக இலக்கணச் சுருக்கத்தை தந்தவராகத் திகழ்ந்துள்ளார். மொழியறிவுள்ளவனே பிறநூல் கற்கும் திறம் பெறுவான் என்பது அவரது எண்ணமாக இருந்திருக்கக் கூடும். இலக்கணவறிவின்றித் தர்க்கநூல் அறியமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது. நாவலர் சமயமீட்டுருவாக்கத்தில் ஈடுபட்டிருந்த அச்சூழலில் தத்துவ ரீதியான மீட்டுரு வாக்கத்தைச் செய்ய பண்டிதர் முனைந்தார். தன்சமயத்தை தத்துவத்தைத் தர்க்க அடிப்படையில் நிறுவ அவர் முனைந்தார்.

மணிமேகலை, குண்டலகேசி, நீலகேசி சிவஞானசித்தியார் போன்றவை எவ்வாறு பிற சமயங்களை நிராகரித்து தம்சமயம் - தத்துவம் நிறுவமுனைந்தனவோ. அதே பாணியில் தம்செயற்பாட்டை பண்டிதர் முன்னெடுத்தார். ஆனால் முன்னைய நூல்கள் சுட்டாத புதிய சமயங்களான கிறிஸ் தவத்திற்கும் இஸ்லாத் (இசிலாகுமதம்)திற்கும் எதிரான தத்துவப்போராட்டத்தை அவர் முன்னெடுத்தார். கண்டனங்கள், கண்டன கண்டனங்கள், சங்கற்பங்களை இவர் எழுதினார். அவற்றுள் ஊடுபாவாகத் தர்க்கம் திகழ்ந்திருப்பதைக் காணலாம். சைவசித்தாந்த தர்க்கவியற் தளத்தில் நின்று தன் பிரமாணம் கருதி, சமய நிரூபணம், சைவசமய நிரூபணம் செய்து நிற்கும் நூலாக சைவப்பிரகாசனம் திகழ்கிறது.

**சைவப்பிரகாசனம்**

இந்நூல் சாதாரணபீடிகை, விஷேடபீடிகை எனும் இருபகுதிகளைக் கொண்டது. சாதாரணபீடிகை, இலக்கணம், பிரமாணம் எனும் இரு பகுதிகளைக் கொண்டது. விஷேடபீடிகை சுருதி நிரூபணம், சமய நீரூபணம், சைவசமய நிரூபணம், சைவச்சுருதிநிரூபணம் எனும் பகுதிகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இவை மெய்கண்டாரின் சிவஞானபோத பொது அதிகார, உண்மை அதிகாரங்களையும், நான்கு இயல்களையும் ஞாபகமூட்டுவனவாக அமைந்துள்ளன.

சைவத்தை சமய, தத்துவ அடிப்படையில் எடுத்துரைத்துப் பிரகாசிக்கச் செய்வது சைவப்பிரகாசனம் ஆயிற்று. சைவசித்தாந்த மூல நூல்களான சிவஞானபோதம், சிவஞான

சித்தியார் போன்றன பிரமாணம் கூறியே இலக்கணம் கூறின. (சிவஞானபோத சித்தியார், நூல்களின் அமைப்பு முறையியல் பிரமாணவியல், இலக்கணவியல், சாதனையியல், பயனியல் என்பதே) ஆனால் சங்கரபண்டிதரோ அவ்வாறு உரைக்காது இலக்கணம் கூறியே பிரமாணம் கூறியமை சுட்டியுரைக்கத்தக்கதாகும். இலக்கணமாவது யாது?

" பொருண்மை சாதியுடைமையாதல் குணமுடைமையாதலால் பொருட்இலக்கணம் எனக் கொள்க" [4]

எனத் தர்க்க சங்கிரகமும்

'பிரமாணம், இலக்கணம் இரண்டாலும் பொருளுண்மை பெறற்பாற்று" [5]

எனச் சிவஞானமுனிவரும் கூற, சிவசங்கர பண்டிதர்,

"இலக்கணம் பிரமாணங்களால் வஸ்து சித்தியாம் என்பது நியாய சாஸ்திர சித்தம்" [6]

என்கிறார். இதன் வழி நியாயசாத்திரம் சுட்டிய வழி நின்று,

"இலக்கணமாவது சிறப்பியல்பு அதுபொருளைப் பிறவற்றின் வேறுபடுத்திக் குறிப்பது" [7]

என்கிறார். இலக்கணத்தைக் கெடுக்குங் குற்றங்களாக அவ்வியாத்தி, அதிவியாத்தி, அசம்பவம் என்பனவற்றைக் கூறி விளக்கி நிற்கின்றார். இதனை தர்க்கசங்கிரகமும் கூறிநிற்பது குறிப்பிடத்தக்கது.[8] ஆக, இம் முக்குற்றங்களும் நீங்கிய இயல்புடையதும் இலக்கியம் முழுவதிலும் வியாபித்து இலக்கியமல்லாததின் வியாபியாத தன்மையே இலக்கணம் என்பது முடிவு என்கிறார்.[9] இலக்கண சுவரூபம், தடஸ்தம், அதத்துவியாவிருத்தம் என மூன்று வகையினதாக எடுத்தாளப்படுகிறது. இதனை சைவசித்தாந்த ஆன்மா பற்றிய கருத்தைத் திருட்டாந்தமாக்க் கொண்டு விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலக்கணத்தின் பயன்யாது எனின் பொருள்களை வேறுபடுத்தி வழங்குதலாம்.

**பிரமாணம்**

பொருள்களை வேறுபடுத்தி அறிதலே இலக்கணத்தின் பயன் எனக் கூறிய சங்கரபண்டிதர் அடுத்து பிரமாணத்தை முன்வைக்கிறார். ஏனெனில் அறிய உதவுவது அறிகருவியான பிரமாணமே பதி, பசு, பாசம் எனும் முப்பொருட்களை அறிய ஆன்மாவிற்கு உதவுவது பிரமாணமே என்பது சூக்குமமாக இங்கு உணர்த்தப்படுகிறது. ஏனெனில்,

"உலகத்துப் பதார்த்தங்களை எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவினால் அளந்தறியுமாறு போலப் பதி முதலிய பொருள்களை அளந்தறிவதற்குக் கருவியாதலினாற் பிரமாணம் அளவை எனப்பட்டது" [10]

என்கிறார் திருவிளங்கதேசிகர். சிவஞான முனிவர் சித்தியாரின் "அளவை"யியலுக்குச் செய்தவுரையில்,

"நிறுத்தமுறையானே பொருளுண்மைக் களவு கூறுவான் தொடங்கி, அவ்வளவையினியல் புணர்ந்தார்க்கன்றி அதனை யெடுத்துக்காட்டலா காமையின், முதன்கண் அளவையியல்பு பதினான்கு செய்யுளாற் கூறுகிறார்.[11]

என்று கூறி நிற்கிறார். ஞானப்பிரகாசர், பதி, பசு, பாசத் திரிபதார்த்தமாகிய பிரமேயசித்தி, பிரமாணமின்றி இல்லையென்பதனாற் பிரமாணங் கூறுகிறார்'[12] என்கிறார். தர்க்கசங்கிரகம்,

"பிரமைக்குக்கரணம் பிரமாணம் என்பது பிரமாணத்தின் பொதுவிலக்கணம் உண்மையனுபவ அறிவிற்குக் கருவியாயுள்ளது பிரமாணம் என்பது பொருள்"[13]

என்கிறது. பிரமாணவியல்பு கூறமுற்பட்ட பண்டிதர்,

"பிரமாணமாவது, பிரமிதியின் கருவியாம். பிரமிதியாவது, பிரமாதாபிரமேயத்தை ஐயந்திரி பின்றி உள்ளபடியறிதல். அதுவே மெய்யறிவு"[14]

என்கிறார். இவ்வாறான வரைவிலக் கணத்தை முந்தைய சித்தாந்திகள் முன் வைக்கவில்லை.

பிரமாணமாவது யாது என வினாவின் அளவைகளின்பெயர்களையும், எண்ணிகையும் மற்றையோர் கூறி நிற்க மேற்படி விளக்கத்தை பண்டிதர் உரைப்பது அவரது சைவசித்தாந்த புலமைத்துவத்தைக் காட்டுகிறது. மேலும் பிரமிதியின் அடிப்படையில் விளக் கியுள்ளமை தனித்துவமானதுமாகும். அறிவாராய்ச்சியியலின் அடிப்படை அம்சங்களான பிரமாதா, பிரமேயம், பிரமாணம் என்பவற்றோடு நான்காவதாக பிரமிதி - அளத்தல் என எடுத்தாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிரமிதி என்பதற்கு சித்தா ந்த அகராதி, 'அறிதல், அளவையால் அறிந்த மெய்யுணர்வு'[15] எனப்பொருள் விரிக்கிறது. அறிதலாகிய மெய்யுணர்வு தூண்டப்பெறும் போதே பிரமாதா பிரமாணத்தின் வழி பிரமேயத்தை பிரமதி செய்யும் என்பது கவனத்திற்கொள்ளத்தக்கது. ஆதலாலேயே பண்டிதர் பிரமிதியின் கருவியாக பிரமாண த்தை உரைத்தாரெனலாம்.

மேலும் ஐயம், திரிபு என்பன பொய்யறிவு. கருவியாவது சிறந்த காரணம், கருவி – கரணம் எனவுரைத்து காரணகாரியவுறவை முதல், துணை, நிமித்த காரணங்களூ டாக விளக்குகிறார். நியாய தரிசனத்தின் வழியேயே தன் கருத்துக்களை இந்நூலில் முன்வைத்த பண்டிதர், அதன் நின்றும் மாறுபட்டு சைவசித்தாந்தம் தனித்துவ மாகவுரைக்கும் 'ஆன்ம சிற்சக்தி'[16] (அறிவாற்றல்) பற்றி எடுத்துரைக்கிறார். சிற்சக்தியாகிய பிரமாணத்துக்கும் பிரமேயப்பொருட்குமுளதாகிய ஞாபக ஞாப்பியத்தன்மைச் சம்பந்தமே அவாந்தர வியாபாரம். அச்சம்பந்தத்தாற் தோன்றும் பிரமேயவறிவே பிரமிதி என்கிறார். அச்சிற்சக்தி தன்னியற்கையை நிர்விகற்பமாக பிரமேயங்கள் எல்லாவற்றையும் அறியும் அறிவு அனுபூதி எனவும் அது சுவானுபூதி, பரானுபூதி என இருவகைத்து எனவும் விளக்கி நிற்குந்திறன் குறிப்பிடத்தக்கது.[17]

பிரமாணவியல்பை இவ்வாறு கூறிய பண்டிதர் இந்திரியம், இலிங்கம், சத்தம் என்பவற்றோடு கூடிய ஆன்மசிற்சக்தி, முறையே பிரத்தியக்ஷம், அனுமானம், ஆகமம் எனும் மூவகைப் பிரமாணமாகித் தன்னெல்லைக்கியன்ற பிரமேயங்களை நிருவிகற்பமாக அளந்தறியும் என்கிறார்.[18] இவற்றால் வரும் பிரமிதிகள் பிரத்தியக்ஷ, அனுமிதி, சத்தம் எனவும் அவை அனுபூதி, காட்சி, யுத்தி, கருத்து, சுருதி, கேள்வி எனவும் அழைக்கப்படுவதாகச் சுட்டுகிறார்.[19]

'இந்திரியவிடய சம்பந்தத்தாற் தோன்றும் அறிவு' எனக் காட்சியை இலக்கணப்படுத்திய அவர், இந்திரயங் கருவி; இந்திரிய விடய சம்பந்தம் வியாபாரம்; பிரத்தியக்ஷப் பிரமிதி பலன், என விளக்குகிறார்.[20] தர்க்கசங்கிரகம்,

"மனமானது சுகம் முதலிய அனுபவத்திற்குக் கருவியாகிய இந்திரியம். அதுவும் உயிர் தோறும் நியதமாயிருத்தலின் அநேகமாய். பரமாணுரூபமாய் நித்தமாய் இருக்கும்" [21]

என்கிறது. இந்திரியம் எனும் சொல் பொது வில் மெய், வாய், கண், மூக்கு செவி எனும் புறப்பொறிகளையே சுட்டும். பிற்கால நையா யியர், வைபாடிகர் போன்று சங்கரபண்டிதரும் அகக்கருவியாகிய மனதையும் இந்திரியமாக உரைக்கிறார்.

"ஆன்மா மனத்தோடும் மனம் இந்திரியத் தோடும் இந்திரியம் பொருளோடும் கூடும் அதனால் காட்சியுணர்வு நிகழும் எனவுணர்க" [22]

எனும் தர்க்கசங்கிரகவரிகள் மனதை இந் திரியமடையக் கருதுவதற்கான காரணத்தைப் பகர்கிறது. மனதுக்கு உணர்வு, விருப்பு,

முயற்சி, இன்பம், துன்பம், வெறுப்பு எனும் அகப்பொருள் நேரே யோக்கியம் (தக்கது) என்கிறார் பண்டிதர்.[23] கட்புலனாகத்தக்க; தகாதன யாவை எனவுரைத்துப் பொறிகளால் வரும் காட்சியைத் தெளிவுபடுத்துகிறார். பிரத்தியக்ஷப் பிரமிதியை நிர்விகற்பம், சவிகற்பம் எனப் பகுத்துரைத்து நியாயவாதிகளின் வழி விசேடணத்தோடு கூடுதலன்றி பொருண்மை மாத்திரத்திற்றோய்ந்து இஃது ஒன்றெனத் தோன்றும் அறிவு நிர்விகற்பம் என்றும் நாம, சாதி, குண, கருமத் திரவியங்களாகிய விசேடணங்களோடு கூடித்தெரிவது சவிகற் பம் என்றும் கூறுகிறார். ஆக இந்திரியம் புணர் ந்த சிற்சக்தியே பிரத்தியக்ஷப் பிரமாணம் என் கிறார். அத்தோடு பித்தம், படலம், தூரம், இருள் முதலியவற்றால் ஏற்படும் காட்சி – பிரத்தியக்ஷப் போலி என்கிறார்.

அனுமானத்தை அனுமிதியின் கருவியாம் என்கிறார். இதனை, “அனுமானமாவது அனுமிதிக்குக் கரணம்”[24] என தர்க்கசங்கிரகம் கூறுகிறது. அனுமிதியானது யாது எனின் ஆராய்ச்சியாற் தோன்றும் ஞானம்” என்பர். இதனை விளக்க, ‘சிற்சக்தியோடு கூடிய இலிங்கம் அனுமிதியின் கருவி ஆதலின் அனுமானப்பிரமாணம் எனப்படும். மேலும் அனுமிதியாவது இலிங்கத்தின் பராமரி சத்தாற் தோன்றும் அறிவு” என்கிறார். இங்கு இலிங்கவுணர்வு கருவி பராமரிசமே வியாபாரம்; அனுமதிபலம் எனப்படுகிறது.[25] இவ்வனுமானம் சுவர்த்தம் - தன்பொருட்டு, பரார்த்தம் - பிறர் பொருட்டு என இரு வகைத்து. தான் உணர்தல் - தன்பொருட்டு பிறர்க்கு உணர்த்தப் பயன்படுத்தும் அனுமானவாக்கியம் - பிறர்பொருட்டு என விளக்கப்படுகிறது. இதற்கு பிரதிக்ஞை – மேற்கோள், உதாகரணம் - எடுத்துக்காட்டு, திருட்டாந்தம் - காணப்பட்ட முடிபை உடையது எனும் உறுப்புக்கள் பண்டிதரால் எடுத்தாளப்பட்டுள்ளன. அருணந்தி சிவாச்சாரியார் ‘தொகையார் உறுப்பு ஐந்தொடுங்கூடச், சொல்வாருமுளர் துணிந்தே’ என்பதால் தான் சுட்டுவது மூவுறுப்புக்களே என்பதனை மறுதலையாய்ச் சுட்டினார்.[26] அதே வேளை பௌஷ்கர ஆகமமும் சித்தியாரின் உரையாசிரியர்களும் ஐந்து அங்கக்கொள்கையையே பின்பற்றினர்.[27] சங்கரபண்டிதரும் அனுமானத்தை வெறும் வாதமுறையாகக் கருதாமல் அருணந்தி சிவாசாரியார்போல ஓர் அறிகை முறையாகவே கருதியுள்ளார். அதனாலேயே மூன்றங்கக் கொள்கையை முன்வைத்தார். அவற்றை உடன்பாடு, எதிர்மறை எனும் தளங்களை விளக்கினார். பக்கம், ஏது, திருட்டாந்தத்தை இந்திய மெய்யியலாளர்களின் வழி எடுத்து ரைத்தார். அனுமானப்போலிகளையும் விளக்கி யுரைத் துள்ளார்.

தொடர்ந்து, ஆகம அளவையை விளக்குகிறார். ‘வாக்கியப் பொருளுணர்ச்சியின் கருவி சிற்சக்தியோடு கூடிய சத்தமே வாக்கியப் பொருளுணர்ச்சியின் கருவியாதலின் ஆகமம் பிரமாணம் எனப்படும் என்கிறார்.[28] மேலும் ‘சத்தமாவது, ஆத்தனது வாக்கியம்’[29] என தர்க்கசங்கிரகத்தின் வழி[30] எடுத்துரைத்துள்ளார். மேலும் வாக்கியப்பொருளுணர்ச்சி சத்தத்தின் பதப்பொருளுணர்ச்சியியால் உண்டாகும் அறிவு என்றும் சத்தவுணர்வு கருவி; பதப்பொருளுணர்ச்சி வியாபாரம் சத்தவுணர்ச்சி பலம் என்றும் உரைக்கிறார். அதன் வழி சைவசித்தாந்த தத்துவவழி நின்று ஆகமத்தை வாக்கியம், பதம் - அதன் வகைமை – விளக்கம் என்பவற்றின் வழி விரித்துரைக்கின்றார் - ஆகமப் போலிகளும் தெளிவுறுத்தப் பட்டுள்ளன. பிரமாணத்திற்குப் பயன் பிரமேயங்களை உள்ளபடியறிதல் எனக் கூறி சாதாரணபீடிகையை நிறைவு செய்தார் பண்டிதர்.

**சுருதிநிரூபணம்**

இலக்கண, பிரமாணங்களின் வழி சைவநிரூபணங்களைப் பண்டிதர் முன்வைக்கிறார். அவற்றுள் சுருதி நிரூபணம் விளக்கப்படுகிறது. இதன்வழிப் பிரமாணங்களுள் ஆகமப்பிரமாணத்திற்கு அவர் வழங்கும் முதன்மையை அறிய முடிகின்றது. ஆகம அளவையை கூறியவன் ஆத்தன் அவன் யார் எனும் வினாவிற்கு, "அநாதி சுத்தனும், வியாபகனும் நித்தியனும், சுவதந்திரனும், நிரவதி சர்வஞ்ஞனும், சர்வகர்த்தாவும் சர்வானுக்கிரககாரனும், பரிபூரணனும், சாந்தனும் பாதமிலியும் ஆகிய ஈஸ்வரனே பரமாத்தன் எனப்படுவான்" என விளக்கியுரைக்கின்றார்.[31] அப்பரமாத்தனால் அருளப்பட்ட பாரமார்த்திக வாக்கிய சமூகமே ஆதிச்சுருதி எனப்படுகின்றது. முப்பொருள் உண்மை, முக்தி உள்ளிட்ட விடயங்களை பரமார்த்தம் எனச் சுட்டுகிறார். அதேவேளை ஈஸ்வரனாலும் சீவராலும் செய்யப்பட்ட அவாந்தரார்த்தமும் இருளாகிகார்த்தமுமுடைய சிஷை, நிருத்தம் முதலானவை ஆதி சுருதியாகா, என்கிறார். ஆக, ஆதிச்சுருதி எது எனின்,

'ஈஸ்வரனாற் செய்யப்பட்ட பரோக்ஷார்த்த அனுபவ சாதனமே சுருதி: சீவர்களாற் செய்யப்பட்ட விவாத வாக்கியமே சுருதி. ஆதிசாத்திரமே சுருதி. பிரத்திய அனுமானங்களால் உணரப்படாத புருஷார்த்த உபாயங்களை தகுதியாக உணர்த்தும் வாக்கியமே சுருதி'

என எடுத்துரைக்கின்றார்.[32] அது கரும காண்டம் எனும் இருபகுதிகளை யுடையது. மேலும் சுருதி, மந்திரம், பிரமாணம் எனும் பகுதிகளையுடையது. என்றும் அவையே தோத்திரம், சாத்திரம் எனப்படும் என்றும் கூறுகிறான். பலவாறு சுருதியின் தாற்பரியத்தை பிற பிரமாணங்களிலும் மேலானதாய், ஏனைய பிரமாணங்களை உள்ளடக்கியதாய் சுருதி பிரமாணத்தை பண்டிதர் அழுத்தி – முதன்மை கொடுத்து உரைத்தது ஏன் எனும் வினா மேற்கிளம்புவது இயல்பு. இதற்கான விடையை,

"சுருதி கண்டங்கலேனுஞ் சுருதி கண்டார்த் தங்களேனும் மனுட நூலிற் கலந்து வைக்கப்படினும் அவை தெரியுங்கால் பிரிந்து தோன்றும். சுருதியோ டொப்ப நூல் செய்தற்கு மனுடன் ஒரு காலத்தும் வல்லனல்லன், சுருதியைப் பரீக்ஷித்து இது சுருதியன்று, இதுவே சுருதி என்று துணிதற்கு வல்லனேயாம்"[33]

எனப் பூடகமாக உரைக்கின்றார். சீவர்களை உணர்த்திச் செய்வித்து உறுதிப்பயனை உறுவித்தல் சுருதியின் பிரயோசனம் எனக் கூறும் அதேவேளை உண்மைச்சுருதியை உணர்தல். மாந்தர் கடன் என்பதையும் உணர்த்துகின்றார். இவ்வாறான பூடகவார்த்தைகளுக்கு சைவச்சுருதி நிரூபணத்தின் இறுதிப்பகுதி வெளிப்படையான பதியைக் கூறுகிறது. சுருதி பூமிக்கு வந்த வழியை விளக்கிப் பின் சுருதிக்கு அனுகூல, பிரதிகூல சாத்திரங்களைக் குறிப்பிடுகின்றார். புராணம், மிருதி, தரிசன நூல்கள், உபாகமங்கள், வைத்தியம், சிற்பம், கணிதம் என்பன பிரதிகூல சாத்திரங்கள்; உலோகாய்தம் பௌத்தம் ஆருகதம், விவிலியம் முதலாயின என்கிறார்.[34] சித்தியார் முதலான புறச்சமயங்களதும் சிவஞான முனிவர் புறப்புறச் சமயமாகவும் உரிய உலோகாய்த, சமண, பௌத்தத்தோடு கிறிஸ்தவ சுருதியான விவிலியத்தையும் பண்டிதர் சுட்டியிருப்பது கவனிக்கத்தக்கது. அது மனிதனான கிறிஸ்துவால் இயற்றப்பட்டது என்பதும் சைவத்திற்கு புறம்பானது என்பதும் மக்கள் மத்தியில் நிறுவப்பட்டு ஆதியற்றதான இறைவனால் இயற்றப்பட்டதே உண்மைச் சுருதி என உரைத்தார் போலும். காலனித்துவ அரசின் ஆதரவு பெற்ற கிறிஸ்தவத்திற்கு மாற்றான "தர்க்கக் குரலாக" இதனைச் சுட்டலாம்.

**சமய நிரூபணம் - சைவசமய நிரூணம்**

சமயம் என்பது சுருதியிலே நியமிக்கப்பட்ட பரமப் பிரயோசன சித்திற்கு அனுகூலமாகிய

பதார்த்த நியமமேயாம் பரசித்திக்கு அனுகூலமாகிய சித்தாந்த பக்ஷமே சமயமெனினும் ஒக்கும் என விளக்குகிறார்.[35] அதன்வழி அட்டபதார்த்த நூல்களான பதி, பசு. பாசம், பதிகிருத்தியம், பசுகருமம், பசுபோகம், முக்தி சாதனம், முக்தி என்பவற்றை விளக்குகிறார். பெரும்பாலான சித்தாந்திகள் பதி, பசு, பாசம், முக்தி, முக்திக்குரிய உபாயங்கள் பற்றியே பேச, யாவரும் விளங்குந் தன்மையில் சுருங்க, விளக்க இப்பதார்த்தக் கொள்கையை விளக்கியுரைத்திருப்பது பாராட்டத்தக்கது.

சைவசமய நிரூபணத்தின் மெய்கண்ட சாத்திரங்களின் வழி பிரமாண நிரூபணத்தின் ஊடு முப்பொருட்கொள்கையை நிரூபணம் செய்து அவற்றின் இலக்கணம், சாதனை, பயன் என்பன பற்றி உரைத்துள்ளார். அட்டபதார்த்தக்கொள்கை விரித்து விளங்க உரைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக முக்தி சாதனமாக - பாசத்தைக் கெடுத்து சிவத்துத்தைக் கொடுப்பதாக தீக்ஷையை முன்னிறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.[36] இது கிறிஸ்தவ ஞானஸ்தானத்திற்கு மாற்றான குரலாகவே எண்ணத்தோன்றுகிறது. ஏனெனில் சைவப்பிரகாசனத்தின் இறுதிப்பகுதி,

‘சைவதீட்சைக்கு யோக்கியரல்லாத அதிமந்தரபக்குவர்கள். சிவனால் அதிட்டிக் கப்பட்ட அந்த அந்தக் சுருத்தாக்களாற் செய்யப்பட்ட பசு சாத்திரங்களிற் கூறப்பட்ட அனனிய சமயங்களிலே நின்று வழுவாதொழுகலினாலே தத்தமக்கு ஏற்ற பதமுத்தியையடைந்து. காலந்தரத்திற்கு பதிபாக வசத்தாற் சைவத்திற் பிரவேசித்தே முக்தி அடைவர் என்கிறது’ [37]

என அமைந்திருப்பது இதனை நிரூபிக்கிறது. இந்த அடிப்படையில் சைவப்பிரகாசனத்தின் உள்ளடக்க நோக்கங்களைப் பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.

(1) சைவத்தை சமயதத்துவ தளங்களில் நிரூபணம் செய்தல்.

(2) அதற்கு தர்க்கவியலை சித்தாந்த வழி நின்று தேவைக்கேற்ப சித்தாந்தத்திற்கு மாறாகா வழியில் எடுத்துரைத்தல், பிரயோகித்தல்.

(3) பிரமாணங்களுள் சிறந்தது சுருதிப் பிரமாணம்; சுருதி என்பது இறைவனால் அருளப்பட்டதன்றி மனிதரால் - அவதாரங்களால் பிறப்பு இறப்புக்கு உட்பட்டவர்களால் எழுதப்பட்டவை சுருதிகள் அல்ல என நிரூபணம் செய்து பிற சமயங்களை நிராகரணம் செய்தல்.

(4) சைவமே மேலான சமயம் என்பதை தர்க்க ரீதியாக நிரூபணம் செய்து கற்ற மாந்தரை, பல்வேறு தேவைகளுக்காக கிறிஸ்தவம் உள்ளிட்ட மதங்களுக்கு மாறியோரை மீளச்சைவத்திற்கு இட்டுவரல்.

என்பற்றைக் கூறலாம். ‘விவிலியம் முதலாய’[38] என்பதால் இஸ்லாம் சுட்டப்படுகிறது எனக் கருதலாம். (இஸ்லாத்தோடு, பிரமசமாசம் முதலான நவீன மதங்களும் கொள்ளப்படும் என மேற்படிக்கூற்றின் 3ம் அடிக்குறிப்புக் கூறுகிறது) கற்றவர்கள் எனச் சுட்டிப்பாக உரைப்பது ஏனெனின் தன் சிவதூஷண கண்டனம், மிலேச்சமதவிகற்பம் என்பவற்றால் சாதாரணமக்களுக்கு விளங்க உரைத்த பண்டிதர் கற்றவர் தம் கருத்தை - சைவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனின்தர்க்கரீதியாக அறிவுபூர்வமாக அதனை நிரூபணம் செய்தல் வேண்டும் அந்த நிரூபணத்தின் வெளிப்பாடே சைவப்பிரகாசனம் ஆகும்.

**நிறைவுரை**

காலனித்துவ ஏதேட்சயதிகாரம், பிறசமய செல்வாக்கு என்பனவற்றிக்கு ஈடு கொடுத்து சைவத்தைக் காப்பாற்ற சமயரீதியிலான பணிக்கு ஆறுமுகநாவலர் அதிக முக்கியத்துவத்தை வழங்கினார். அதற்குச் சமாந்தரமாக சிவசங்கர பண்டிதர் தன்மொழி, தர்க்க புலமையின் வழிநின்று கல்விகற்ற குறிப்பாகப்

புதிதாக உருவான மத்தியதர வர்க்கத்திற்கு தர்க்கரீதியில் தத்துவத்தளத்தில் நிரூபணம் செய்து சைவமீட்டுருவாக்கத்திற்கு செய்த பணியே சைவப்பிரகாசனம் எனும் நூலாகும். சைவசித்தாந்த தத்துவத்தை எளிமையாய், சுருங்கவும் விளங்கவும் உரைத்து அறிவாராய்ச்சியில் அடிப்படையில் தமிழில் உரைநடையில் எழுந்த ஈழத்தவரின் முதன்நூலாக சைவப்பிரகாசனம் திகழ்கிறது. இதனால் சைவசித்தாந்த செல்நெறியில் தனித்த அடையாளத்தை இந் நூல் பெற்றுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. கைலாசபதி, க., *(1966)*, பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், பாரிப்பண்ணை நிலையம், சென்னை.
2. திருமதி. கலைவாணி இராநாமநாதன் அவர்களுடைய கலாநிதி பட்ட ஆய்வேடும் தவிர சஞ்சிகையில் வெளிவந்த தி.செல்வமனோகரனுடைய *(2007)*, மெய்கண்டார் கட்டுரையும் இதற்கு தக்க சான்றுகளாகும்.
3. செல்வமனோகரன், தி.,(பதி), *(2016)*, சிவசங்கரபண்டிதம், சைவவித்தியாவிருத்திச்சங்கம், யாழ்ப்பாணம், ப.*23*
4. சிவஞானயோகிகள் , (மொ.பெ.), *(1983)*, தர்க்க சங்கிரகம், திருவாவடுதுறை ஆதீனம், தமிழ்நாடு, இல.*1:2*,ப.*4*
5. சிவஞானயோகிகள், *(1952)*, சிவஞானபோதமும் சிவஞானபாடியமும், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை. ப.*287*
6. செல்மனோகரன்.தி.,(பதி), *(2016)*, மு.கு.நூ. ப.*39*
7. மேலது
8. தர்க்கசங்கிரகம், ப.*40*
9. செல்வமனோகரன்,தி.,(பதி), *(2011)*, மு.கு.நூ, ப.*40*
10. திருவிளங்கம், மு., *2010*, சிவஞானசித்தியார் சுபக்கம், சிவத்தொண்டன் சபை,யாழ்ப்பாணம். ப.*14*
11. சிவஞானசுவாமிகள்,(பொ.உ), *(1883)*, சிவஞானசித்தியார், த.கைலாசப்பிள்ளை வெளியீடு, யாழ்ப்பாணம், ப.*7*
12. செல்வமனோகரன்,தி., (பதி), *(2017)*, சிவஞானசித்தியார், சைவவித்தியாவிருத்திச்சங்கம், யாழ்ப்பாணம், ப.*15*
13. தர்க்கசங்கிரகம், ப.*12*
14. மேலது, ப.*42*
15. மூர்த்தி, அ.தி., *(1998)*, சைவசித்தாந்த அகராதி, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, ப.*193*
16. செல்வமனோகரன், தி., (பதி), *(2016)*, மு.கு.நூ. ப.*44*
17. மேலது,ப.*45*
18. மேலது,
19. மேலது, ப.*46*
20. மேலது, ப.*47*
21. தர்க்கசங்கிரகம், ப.*13*

22. தர்க்கசங்கிரகம், ப.25
23. செல்வமனோகரன்.தி., (2016), மு.கு.நூ. ப.47
24. தர்க்கசங்கிரகம், ப.27
25. செல்வமனோகரன் (பதி) (2016), மு.கு.நூ. பக்.51 - 52
26. சிவஞானசித்தியார், பா.17
27. கிருஷ்ணராஜா.சோ., (1998), சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, ப.31
28. செல்வமனோகரன்.தி., (பதி) (2016), மு.கு.நூ ப.67
29. மேலது
30. தர்க்கசங்கிரகம், ப.37
31. மேலது, ப.76
32. மேலது, பக்.78,79
33. மேலது, ப.93
34. மேலது, ப.102
35. மேலது, ப.58
36. மேலது, பக். 121-124
37. மேலது, ப. 125
38. மேலது, ப.103